பக்கங்கள். எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.


# உதயன்

விலை ரூபா 6-00

கூடு10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 06 சனிக்கிழமை (23-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 303


### நாகர் கோவிலில் கொடூரம்

# பாடசாலை மீது புக்காரா தாக்குதல்!

# 25 மாணவர் உட்பட 40 பேர் பலி!!

## பிஞ்சு உடல்கள் பிய்ந்து சிதறின நாலாபுறமும் சதைத் துண்டங்கள்

—வடமராட்சி, பருத்தித்துறை, செம்பியன்பற்று, யாழ். செய்தியாளர்கள்—

வடமராட்சி, செப்ரெம்பர் 23

ஸ்ரீலங்கா விமானப் படையின் "புக்காரா" விமானங்கள் நாகர் கோவிலில் நேற்று நடத்திய — ஈவுஇரக்கமற்ற — கொடூர — கோரத்தனமான — குண்டு வீச்சுத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 25 பேர் உட்பட 40 பேர் உடல் சிதறிப் பலியாகினர்; பல மாணவர்கள் உட்பட நூறு பேர் வரை படுகாயமடைந்தனர்.

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீது நேற்று நண்பகல் 12-50 மணியளவில் — பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த சமயம் — நடத்தப்பட்ட இக்குண்டு வீச்சில் பிஞ்சு உடல்கள் பிய்ந்து சிதறின; அப்பகுதி எங்கும் — நாலாபுறமும் — சதைத் துண்டங்கள் பரவிக் கிடந்தன; பிணவாடை வீசியது.

நாகர்கோயில் பகுதி மீது நேற்றுக் காலை வட்டமிட்டுச் சென்ற புக்காராக்களே நேற்று நண்பகல் திடீரென வந்து மிலேச்சத்தனமாக குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றன.

நாகர் கோயில் மகா வித்தியாலய முன்றிலில் — அத்தி மரத்தின் கீழ்—இடைவேளை நேரம் கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்த குண்டுகளினால் பிஞ்சு உடல்கள் பிய்ந்து சிதறின; அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் சிலரும் உயிரிழந்தனர்; அருகிலிருந்த வீடு ஒன்று முற்றாகத் தகர்ந்தது; பாடசாலைக் கட்டடமும் அருகில் இருந்த மற்றும் சில வீடுகளும் சேதமுற்றன.

குண்டு வீச்சில் உயிரிழந்த 21 மாணவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன; மற்றும் பல சிறார்களின் உடல்கள் சின்னாபின்னமாகி சிதறிக் கிடந்ததால் அடையாளம் காண

( 2 ஆம் பக்கம் பார்க்க)

## பலியான மாணவரில் 21 பேரின் விவரம்

நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது புக்காரா விமானம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களில் 21 பேரின் விவரம் வருமாறு:-

★ தர்மலிங்கம் உசாந்தினி [வயது 13]
★ மார்க்கண்டு நாகலோஜினி [வயது 10]
★ தாமோதரம் சகுந்தலா [வயது 12]
★ இராசவர்ணன் உமாகாந்தன் [வயது 17]
★ பூலோகராசா துசாந்தினி [வயது 14]
★ ரவீந்திரன் அமிர்[illegible] (வயது 10]
★ பாலச்சந்திரன் [illegible] [வயது 10]
★ சுந்தரலிங்கம் [illegible] மனை [வயது 15)
★ குகசரவணமலை [illegible] இனி வயது (13)
★ உ[illegible] தர்சினி [illegible]
★ செல்வகுலசிங்கம் [illegible] வதி [வயது 17]
★ கிருஷ்ணகோபால் [illegible] சீலன் [வயது 13]
★ ராஜரட்ணம் கவிதா[illegible] (வயது 10)

[8 ஆம் பக்கம் பார்க்க]

### மக்கள் இடம்பெயர்வு

நாகர்கோவில் மற்றும் அதை அண்டிய பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்திவருவதை அடுத்து —

நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, மணற்காடு, குடத்தனைப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நேற்று இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

மேலும் செய்திகள் 7 ஆம், 8 ஆம் பக்கங்களில்

# மணற்காடு, கற்கோவளம் பகுதிகளிலும் நேற்று புக்காரா குண்டுவீச்சு! அறுவர் பலி!!

வடமராட்சி, செப். 23

வடமராட்சி கிழக்கில் மணற்காடு பகுதியிலும் —

வடமராட்சி வடக்கில் நெல்லண்டையிலும் கற்கோவளத்திலும் நேற்று புக்காரா விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுக்களில் அறுவர் கொல்லப்பட்டனர் பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மணற்காட்டில் இடம்பெற்ற குண்டுவீச்சில் மணற்காடு கத்தோலிக்க தேவாலயமும் சேதமடைந்தது.

காலை 6-00 மணி அளவில் இந்த குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

மணற்காட்டில்

முதலாவது குண்டுவீச்சு மணற்காட்டில் இடம்பெற்றது.

இரண்டு புக்காரா விமானங்கள் நடத்திய இத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

இரத்தினம் அன்ரன் அன்ரனிதாஸ் [வயது 8) மனோகரதாஸ் மரியரஜித் (வயது 10] ஜோன்பொஸ்கோ காரமிலா (வயது 5] ஆகியோரே மணற்காட்டில் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் மூவரும் மணற்காட்டைச் சேர்ந்தவர்கள்.

நெல்லண்டையில்

வடமராட்சி வடக்கு நெல்லண்டையில் இடம்பெற்ற குண்டுவீச்சில் நெல்லண்டை உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த வேலன்வீரன் (கிட்டினர் — வயது 70] இவரது மகன் வீரன் இராசதுரை (வயது 36) ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

கற்கோவளத்தில்

கற்கோவளம் முனியப்பர்

(2 ஆம் பக்கம் பார்க்க]

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 குழந்தைகள் உட்பட 7 பேர் ஷெல்லுக்குப் பலி!

வடமராட்சி, செப். 23

வடமராட்சியில் நேற்று அதிகாலை 3.00 மணி தொடக்கம் நடத்தப்பட்ட அகோர ஷெல் வீச்சுக்களின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர். பலர் [illegible] அடைந்தனர்.

அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தின்போது பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கை [illegible] அருச்சுணலிங்கம் [வயது 59] உயிரிழந்தார்.

இளைப்பாறிய மது பரிபாலன சபை சிரேஷ்ட எழுதுவினைஞரான இவர் இருகைகளையும் இழந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு அங்கு மரணமானார். நித்திரையின் போது இந்த சம்பவம் இடம்பெற்றது.

காலை 10.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது தும்பளைகலட்டி பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகள் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

ஈஸ்வரபாதம் திலீபன் (வயது 11] அவ்விடத்திலேயே

[ 8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு கூருகிறோம்



பூவுலகில்: 05 — 06 — 1921

நிதியத்தில்: 28 — 08 — 1995

### வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி

அவர்களை

23-9-95, 27ஆவது நாளான இன்று......

ஆலம்விழுதுகள் போன்ற எமக்கு அவர் அப்பாவும், அப்பப்பாவும், மாமாவுமானார் ஆண்டவர் பாதமலர் சென்றடைந்தாரென ஆனந்த மனதோடு அன்னாரை நினைவு கூருகிறோம்

அல்லேலூயா!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
எஸ். மகேசன்
யாழ்ப்பாணம். [38647]

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
வலிகாமம் பகுதி

## தேசிய பாதுகாப்பு நிதி கையளித்தல்

இம்மாதம் 25ஆம் திகதி தமிழீழ அரசியல் துறை நிதிப்பிரிவில் மேற்படி நிதி ஏற்பதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதை அறியத் தருகின்றோம்.

மேலதிக பல விவரங்கள் நிர்வாகப் பிரிவு செயல ...இல் 25ஆம் திகதி நேரில் அச்சிட்டு வழங்கப்படவுள்

22ஆம் திகதி பத்திரிகையில் அறிவித்ததன் படி இம் ...ாதம் 25ஆம் திகதி விடுமுறை தினம் அல்ல என்பதை ...ும் ...வனத்தில் கொள்க.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

[சி-2339]

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
தென்மராட்சிக் கோட்டம்

## மிக முக்கிய அறிவித்தல்

இன்று [23-09-95] சனிக்கிழமை காலை 10 மணிக்கு அனைத்து நிறுவன உரிமையாளர்களும் தபால் நிலைய வீதியில் உள்ள ''வெள்ளி'' கல்வி நிறுவனத்தில் தவறாது ஒன்று கூடவும்.

★ கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வருகையை உறுதிப்படுத்துக.

த. க. நி. ஒன்றியம்,
தென்மராட்சி

[சி/2338]

---

## வடமராட்சியில் மழை

நீண்ட கால இடைவெளிக்குப் பின் நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியில் மழை பெய்தது. (ஒ-17)

---

### பாடசாலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை.

அவ்வாறு சதைத் துண்டங்களாக நிலத்திலும் மரங்களிலும் தொங்கிக் கிடந்த அவயவங்களும், கை, கால்கள் போன்ற சிறுவர்களின் உறுப்புக்களும் சாக்குகளிலும் உரப் பைகளிலும் கூட்டி அள்ளிக் கொண்டு செல்லப்பட்டன.

பாடசாலைக்கு மாணவர்கள் அணிந்து வந்த வெள்ளைச் சீருடைகளும், கழுத்துப் பட்டிகளும் தும்பு தும்பாகப் பிய்ந்து இரத்தத்தில் தோய்ந்து சதைப் பிண்டங்களிடையே சிதறிக் கிடந்தன. அவர்களின் புத்தகங்கள் கொப்பிகள் இரத்தம் தோய்ந்த நிலையில் சிதறிக் கிடந்தன. இவற்றைக் கண்ணுற்ற பலர் பலத்த குரல் எடுத்து தேம்பி தேம்பி அழுது கண்ணீர் சிந்திய காட்சிகளையே நேற்றுப் பிற்பகல் அங்கு காணமுடிந்தது.

இளம் சிறார்கள் சின்னாபின்னப்படுத்தப்பட்டதைப் பார்த்து அப்பகுதி மக்களில் பலர் இடிந்து போய் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

குண்டுவீச்சில் பல உடல்கள் சிதறிப் போய் விட்டதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையைச் சரியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

எனினும் 25 இற்கும் அதிக மாணவர்களும் 15 இற்கும் அதிக பொது மக்களும் அப்பகுதியில் உயிரிழந்ததை கணக்கிட முடிந்தது.

உயிரிழந்த 15 பொது மக்களில் மூவரின் விபரமே இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைத்தது அது வருமாறு:-

★ அப்புலிங்கம் சண்முகநாதன் (வயது 22)

★ செல்லத்துரை அருந்தவவேல் (வயது 35]

★ அ. நாதன் (வயது 23]

(உ-173-118-15-13-ரி-3-4)

---

### மணற்காடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலடியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் சுப்பிரமணியம் தங்கரத்தினம் (வயது 60] என்ற பெண் உயிரிழந்தார்.

பின்னர் நண்பகல் 12-00 மணி அளவில் வராத்துப் பளையிலும் புக்காரா விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின. இதில் தெய்வாதீனமாக எவரும் உயிரிழக்கவில்லை ஆனால் 14 பேர் காயமடைந்தனர்.

[இ-173-13-118-15]

---

## பரா வெற்றிக்கேடயம்

அமரர் பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாக நல்லூர் நொதேண் விளையாட்டுக்கழகம் நடத்தும்

6 பேர் கொண்ட 6 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

விண்ணப்ப முடிவு திகதி: 26 — 09 — 1995

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

கிரிஷா
கிறைண்டிங் மில்,
கல்வியங்காட்டுச் சந்தி.

சிவன்
வைத்தியசாலை,
352, K. K. S. வீதி.

[35212]

---

## நல்லூர் லயன்ஸ் கழகம்

எமது கழகத்தால் இன்று 23-9-95 இல் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 29-10-95 இற்குப் பிற்போடப்பட்டுள்ளமையை அறியத் தருகின்றோம்.

செயலாளர்
நல்லூர் லயன்ஸ் கழகம்,
நல்லூர்

22-9-95

(சி-2340)

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா பொன்னுத்துரை

குரும்பசிட்டியைச் சேர்ந்த சின்னையா பொன்னுத்துரை [இளைப்பாறிய தபால் சேவகர் தெகிவளை] நேற்றுக் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்தாச்சியின் கணவரும், கமலாதேவி [கனடா], பாலசுப்பிரமணியம் [இலட்சுமி நகை மாடம் யாழ்ப்பாணம்], விமலாதேவி, தங்கவேல் பிள்ளை [கனடா], தனலச்சுமிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசநாயகம், மற்றும் புவனேஸ்வரி, கந்தப்பு, நிருபா [கனடா], தேவராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [23-9-95) பி. ப 2 மணிக்கு கரவெட்டியில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
(மகன்]

கோவில் சந்தை அருகில்,
கரவெட்டி மத்தி.

(38649)

---

### மார்க்கண்டு சுவாமிகள்

திருநெல்வேலி மார்க்கண்டு சுவாமிகள் [22-09-95] நேற்று அமரத்துவம் எய்திவிட்டார்.

இவர் கலாநிதி பொன்னையாவின் சீடரும், யோகர்சுவாமியின் அன்பரும், வேதாந்தமடத்திலும் திவ்விய ஜீவனசங்கத்திலும் வேதாந்த வகுப்புக்கள் நடத்தியவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23-9-95 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு அரசடி ஒழுங்கையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. கனகரத்தினம்
பெறாமகன்

அரசடிஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(38650]

---

### திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை

சிங்கைநகர் புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னம்மா கணபதிப்பிள்ளை நேற்று (22-9-95) காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், வி. ஜி. தங்கவேல் (மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் - பனை அபிவிருத்திச் சபை], க. அருள் மாஸ்ரர் (போராளி - தமிழீழ கல்விக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி த. விமலாதேவி (பதிவு வைத்திய அதிகாரி - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), திருமதி சி. யோகேஸ்வரி [ஆசிரியை பூம்புகார் நித்திலா கல்விக்கூடம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன் சி. அருணன், செல்விகள் சி. மயூறி, த. வேனினி, த. விமல்சினி, த. தர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [23-9-95] சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. ஜி. தங்கவேல்
க. அருள் மாஸ்ரர்
[மகன்மார்.

சிங்கைநகர்,
புலோலி தெற்கு,
புலோலி.

[88651)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றிய
தென்மராட்சிக் கோட்டம் நடத்தும்

## தியாகி திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவு விழா

காலம்: 24-09-95 (ஞாயிறு) காலை 9 மணி
இடம்: யா/சா/ டிறிபேக் கல்லூரி பிரதான மண்டபம்

நிகழ்ச்சிகள்

1. அக வணக்கம்
2. ஈகைச் சுடரேற்றல்
3. வரவேற்புரை
4. சிறப்புரைகள்
5. எஃதென்ன எண்பதென்ன? என்றும் நீ எம்முடன் தான் (கவிதாஞ்சலி)
6. பட்டி மண்டபம்: ''தமிழீழ விடுதலைப் போருக்கு அதிகூடிய துரோகமிழைத்த தேசம்'' இலங்கையா? இந்தியாவா? (யாழ். கோட்டம் — தென்மராட்சிக் கோட்டம்)
7. மாணவர் இசை நிகழ்வு
8. நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- விழாக் குழுவினர்.

முக்கிய குறிப்பு:
அனைத்து நிறுவன உரிமையாளர்கள், ஆசிரியர், மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

(சி-2337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர்

# இலங்கை இரு பகுதிகளாகும் தீர்வே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்

## ஆஸி. அமைச்சரிடம் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

மெல்போர்ண், செப். 23

இலங்கைத்தீவு இரு பகுதிகளாக அமையக் கூடிய தீர்வுத் திட்டமே இலங்கையில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும்.

இவ்வாறு அவுஸ்ரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் கராட் இவானிடம், அங்குள்ள தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

அண்மையில் அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் தமது நாட்டிலுள்ள தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன், இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

அதன் போதே மேற்படி விடயம் எடுத்துக் கூறப்பட்டது.

அப் பேச்சுக்களின் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மூன்று பிரதான விடயங்களை வலியுறுத்தினர்.

★ இலங்கையில் நிரந்தர அமைதியும், சமாதானமும் ஏற்பட வேண்டுமானால், இலங்கைத்தீவு இரு பகுதிகளாக அமையக் கூடியதாக தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட வேண்டும்.

★ இலங்கை அரசுக்கான ஆயுதத் தடையை அவுஸ்திரேலியா தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும்.

★ தமிழர் மீது இலங்கை அரசு விதித்துள்ள உணவு மற்றும், அத்தியாவசியப் பொருள்களுக்கான தடையை நீக்க அவுஸ்திரேலிய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். (ஒ-எ)

## போரை நிறுத்தக் கோரி 10ஆயிரம் அன்னையர் மனு

கொழும்பு, செப். 23

வடக்கு - கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி வவுனியா மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்த 10ஆயிரம் அன்னையர் கையொப்பமிட்ட மனு ஒன்று அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளிக்கப்பட்டுள்ளது என கொழும்பு ஆயர் அதிவண மல்கம் ரஞ்ஜித் தெரிவித்ததாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுக்கான மனு ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனவும், விடுதலைப் புலிகளுக்கான மனு மன்னார் ஆயர் அதிவண ராயப்பு யோசெப் மூலம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## சங்கானை, சண்டிலிப்பாய்

## மக்கள் மிக ஆர்வத்துடன் பாதுகாப்பு நிதி அன்பளிப்பு

சங்கானை, சண்டிலிப்பாய் வட்டத்து மக்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு மிகுந்த ஆர்வத்துடன் பங்களித்து வருகிறார்கள்.

சங்கானை வட்டத்துக்கு உட்பட்ட சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் ரூபா மூன்று லட்சமும் வைரவன் செமமாலை ரூபா ஒன்றரை லட்சமும், ந. பரமேஸ்வரி ஒரு லட்சத்துப் பதினையாயிரமும் மனம் உவந்து வழங்கியுள்ளார்கள்.

சண்டிலிப்பாய் வட்டத்தில் திருமலை நட்சத்திர விளையாட்டுக் கழகத்தினர் வீரம் செறிந்த போராட்டத்தை விரைபுபடுத்த தங்களிடமுள்ள முழு நிதியையும் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் அமலதாஸ் மூலம் ரூபா ஐம்பதினாயிரம் வழங்கி உள்ளார்கள். மேலும் திரு ஆ. ஆறுமுகம் தியாகராசா ரூபா ஒரு லட்சமும், திரு. சிவக்கொழுந்து சுந்தரலிங்கம் ரூபா ஐம்பதினாயிரமும் வழங்கியுள்ளனர். (ஓ)

## வவுனியா சந்தையில் கிரனேட் மீட்பு

வவுனியா நகரில் சந்தைப் பகுதியில் இருந்து வெடிக்காத நிலையில் கிரனேட் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அக்குண்டு பொலிஸாரலும் இராணுவத்தினராலும் பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகளின் குரல் வானொலியில்

சனி இரவு
23 - 09 - 1995

★ 8-02 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி—பகீரதி எழுதிய ''புரட்சிக்குயில்''
★ 8 - 20 — நேயர்கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8 - 40 — கவியரங்கம் ''நலம் நலம் அறிய ஆவல்''

ஞாயிறு காலை
24 - 09 - 1995

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7 - 15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை

### தமிழீழ வானொலியில்

சனி மாலை

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15— தியாக தீபம்
★ 5 - 30 — அறிவியல் வினாடி — வினா
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 —செய்திகள்
★ 6 - 15 — பாமாலை

# பாடசாலை அதிபர்களின் சம்பளம் உயருமா? தொழிற்சங்கங்கள் அரசுக்கு யோசனை

1995 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்டு ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்ட பின்னர் அதிபர்களின் சம்பளம் பழைய நிலையில் இருந்தபடியால் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த 20805 அதிபர்கள் இடையே பெரும் மனக்கொந்தளிப்பும் விரக்தியும் வளரத் தொடங்கியது.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படும் எனப் பரவலாக எண்ணப்பட்டபோதிலும் இது சம்பந்தமான எந்த முயற்சியும் இடம்பெறவில்லை. முதன் முறையாக 1995-06-23 தரம்பெற்ற இலங்கை அதிபர் சேவைச் சங்கம் கல்வி உயர்கல்வி அமைச்சிடம் தனது ஆலோசனைகளை நேரில் சமர்ப்பித்தது. அச்சமயம் மற்றைய ஆசிரியர் சங்கங்களுடன் கலந்து பேசி புதிய இலங்கை அதிபர் சேவையை ஸ்தாபிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இச்சங்கத்திடம் உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம். எஸ். பெரேராவினால் ஆசிரியர் சங்கங்கள் அனைத்தும் அழைக்கப்பட்டு கல்வி அமைச்சின் இச்சங்க அலுவலகத்தில் கடந்தமாதம் மூன்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதிபர் சேவைச் சங்கத்தின் பிரமாணக் குறிப்பின் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து மற்றைய ஆசிரியர் சங்கங்களின் கருத்துக்கள் பெறப்பட்டு ஏகோபித்த தீர்மானத்தின் பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

### கலந்துரையாடல்

இக் கலந்துரையாடலில் தரம் பெற்ற இலங்கை அதிபர் சேவைச் சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தேசிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், ஐக்கிய ஆசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் ஆங்கில ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா ஒருங்கிணைந்த ஆசிரியர் சங்கம் ஆகிய பதினொரு தொழிற் சங்கங்களும் இணைந்து இப் பிரமாணக் குறிப்பை தயாரித்துள்ளன.

இக் குறிப்பை தயாரிக்கும் போது தற்போது சேவையில் உள்ள அதிபர்கள் நியமனம் பெற்ற விதம் பற்றி மிக ஆழமாக ஆராயப்பட்டது. தற்போது கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட தகவலின் படி 4134 முதலாம் தர அதிபர்களும், 8603 இரண்டாம் தர அதிபர்களும் 8068 மூன்றாம் தர அதிபர்களுமாக மொத்தம் 20,805 பேர் அதிபர் சேவையில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இவர்களுள் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 3787 பேரும், 1991ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 3 986பேரும் 1974, 1975, 1978 ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கணிசமான எண்ணிக்கையினரும் அடங்குவர். அத்தோடு பதில் கடமை புரிந்தமைக்காக 1989 முதல் நியமிக்கப்பட்ட 2 126பேரும், 1993 முதல் நியமிக்கப்பட்ட 3,178 பேரும், 1982, 1985 ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட பெரும் தொகையினரும் அடங்குவர். சேவை மூப்பு அடிப்படையில் 1989ஆம் ஆண்டு 1,480 அதிபர்களும், 1991 ஆம் ஆண்டு 248 அதிபர்களும் அடுத்த தரத்தைப் பெற்றுள்ளனர்.

அரசியல் காரணங்களுக்காகவும் அதிபர் தட்டுப்பாடு காரணமாகவும் பதில் கடமை ஒழுங்கு காலத்திற்கு காலம் செய்யப்பட்டது. 1980-4-30 அன்று ஒரு நாள் அப்பதவி பார்ப்பவரும் பாடசாலை தரத்தின்படி நிரந்தரமாக்கப்பட்டனர். ஏழு எட்டு வருடம் கடமை பார்த்து நிரந்தரமாக்கப்பட்டவர்களும் உண்டு. 1993ஆம் ஆண்டு ஒரு வருடம் கடமை பார்த்தவர்கள். நிரந்தரமாக்கப்பட்டனர். இதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பயிலுநர் ஆசிரியர்களும் அடங்குவர். இப்படி பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டு புதிய பிரமாணக் குறிப்பை ஆசிரியர் தொழில் சங்கங்கள் தயாரித்துள்ளன. அதில் உள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு 2 தரம் 2 க்கு மட்டுமே இலங்கை ஆசிரியர் சேவையில் 3 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த 51, 120 ரூபா [illegible] [illegible] திற்கு குறையாத ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்துள்ளதுமான உத்தியோகஸ்தர்கள் போட்டிப் பரீட்சையின் மூலம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் இதன் பின்னர் வகுப்பு 2 தரம் 1. வகுப்பு1 ஆகியவற்றுக்கு கீழ்த் தரங்களில் உள்ளவர்கள் போட்டிப் பரீட்சையின் மூலமும் சேவை மூப்பு அடிப்படையிலும் பதவி உயர்வு பெறலாம் இதற்குரிய பாடத்திட்டப் பரீட்சைப் புள்ளிகள் சேவை மூப்பு திறமை ஆகியவற்றை கணிக்கும் அலகுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

### பாடசாலைகள் மீளாய்வு

இலங்கையில் 10,000 க்கு மேற்பட்ட பாடசாலைகளும் மீள வகைப்படுத்தப்பட்டு இலங்கை அதிபர் சேவையின் தரப்படி பதவிகளுக்கான ஆலோசனைகள் இக்குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போது நிர்வாக முகாமைத்துவ சேவைகளுக்கு வழங்கப்படும் இடைக்கால கொடுப்பனவாக கீழ் வரும்தொகையை இச்சேவைக்கு வேண்டப்பட்டுள்ளது.

வகுப்பு 1-ரூபா 2,000

வகுப்பு 2 தரம் 1 —ரூபா 1,750

வகுப்பு 2 தரம் 2 — ரூபா 1,600

அத்தோடு பாடசாலை வகைப்படுத்தப்பட்ட பின்னர் அதற்கு பொருத்தமான சேவை ஸ்தானக் கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும்.

அதிபர் சேவை சம்பந்தமாக எழும் பிரச்சினைகளைத் தீர்க்க 12பேர் கொண்ட நிலையியல் குழுவொன்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது

### புள்ளிகள்

தற்போது சேவையில் உள்ள சுமார் 20.000 அதிபர்களும் தரம், அதிபர் சேவைக் காலம் கல்வி, தொழில் தகைமைகள், போட்டிப்பரீட்சை போன்றவற்றுக்கு பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் கொடுக்கப்பட்டு புதிய அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### அதிபர் தரம்

தரம் 1 — 5புள்ளிகள்

தரம் 2 — 4புள்ளிகள்

தரம் 3 — 3புள்ளிகள்

### அதிபர் சேவைக்காலம்

மூன்று வருட அதிபர் சேவைக்காலத்துக்கு ஒரு புள்ளி வீதம் இறுதியாகக் குறையும் மூன்று வருடங்களுக்கு குறைவான காலத்துக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையிலும் புள்ளிகள் சேர்க்கப்பட வேண்டும். உதாரணமாக 20 வருட அதிபர் சேவைக்காலம் உள்ள அதிபர் ஒருவர் 7புள்ளிகளைப் பெறலாம்.

### கல்வி தொழில் தகைமைகள்

பயிற்சிச் சான்றிதல் - 2 புள்ளிகள்

பொதுப்பட்டம் - 3 புள்ளிகள்.

சிறப்பு/வகுப்புச்சித்தி/ கல்வி மாணி/விஞ்ஞானமாணி/ அபிவிருத்திமாணி - 4 புள்ளிகள்.

கல்விடிப்ளோமா - 1புள்ளி

தேசிய கல்வி நிறுவனம் போன்ற நிறுவனமொன்றின் ஒரு வருடத்திற்கு குறையாத காலத்தைக் கொண்ட முகாமைத்துவ பயிற்சிக்கு— 1 புள்ளி.

( 4 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:
—பா. இ. நாதன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் மூவர் 26 நாள்களில் 4 பாடசாலைகளுக்கு மாற்றம்!

முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை ஆராய விசாரணைக் குழுக்களை நியமித்து விட்டு, தற்போதைய அரசும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் கற்பிட்டி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மூவர் 26 நாட்களுக்குள் 4 பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

இவர்கள் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் என்பதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்களுள் இருவர் ஆண்கள், மற்றையவர் பெண்.

இந்த அரசியல் பழிவாங்கல் சம்பவம் தொடர்பாக வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம். ஐ. பிஸ்ருல் ஹாபியிடம் முறையிடப்பட்டுள்ளது. (ஓ-எ)

# லண்டன் றோயல் அக்கடமி குழுவினர் இலங்கை விஜயம்

கொழும்பு, செப். 23

லண்டன் றோயல் பாதுகாப்பு அக்கடமி குழு ஒன்று விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

பல நாடுகளையும் சேர்ந்த பாதுகாப்புத்துறை அதிகாரிகளைக் கொண்ட இக்குழுவுக்கு பிரிட்டிஷ் பியர் அட்மிரல் தலைமை வகிக்கிறார்.

இலங்கையின் அரசியல், சமூக விவகாரங்கள், பொருளாதாரம், கைத்தொழில் துறை மற்றும் பாதுகாப்பு துறை பற்றி அறிய வந்துள்ள இக்குழுவினர் இங்கு, அமைச்சர்கள், பாதுகாப்புத்துறையினர், எதிர்க்கட்சியினர் மற்றும் தனிப்பட்ட அவதானிகள் ஆகியோரையும் சந்தித்து உரையாடுவர். (ஓ-எ)

# உண்ணா விரதத்தில் இன்று பங்குபற்றுவோர்

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவாக இன்று நடைபெறும் அடையாள உண்ணா விரதங்கள்.

வலிகாமம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில்—இணுவில் தாவடி மக்கள், அண்ணா தொழிலகம், ஊர்காப்புக்கழக உறுப்பினர்கள், இணுவில் தாவடி வர்த்தகர்கள்.

தீவகம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் — புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம்.

தென்மராட்சி

மணற்குணாய்ப் பிள்ளையார் கோயில் முன்றிலில் — நவபுரம் தமிழ்க்கலவன் பாடசாலை, நவபுரம் நவ ச. ச. நிலையம், கைதடி வடக்கு கார்த்திகா ச. ச. நிலையம், கைதடி கிழக்கு ச. ச. நிலையம், சரசாலை மட்டுவில் மக்கள் நகரசபை ஊழியர், தபாலக ஊழியர், உதவி அரச அதிபர் பணிமனை ஊழியர், சே. உத்தியோகத்தர்கள், கொடிகாமம் இளஞ்செல்வன், இளங்கோ, விக்ரம் மாவீரர் ச. ச. நிலையம், படித்த மகளிர் திட்டம், ச. ச. நிலையங்கள், ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்கள், புலோப்பளை மக்கள்.

வடமராட்சி

மூத்த விநாயகர் கோயில் மைதானத்தில் —மூத்த விநாயகர், ஜோதி, இராராஜி அம்பிகை ச.ச. நிலைய உறுப்பினர்கள், பிரதேச மக்கள், லிப்போ தனியார் கல்வி மன்றம், மாணவர் கல்வி மன்றம், நெல்லியடி தொழிலாளர் சங்க உறுப்பினர்கள்.

மாணவர் அமைப்பு

காலை 8-80மணி முதல்— ஞானசாரியார் கல்லூரி, இமையாணன் கல்லூரி.

கடற்புலிகள்

நாகர்கோயிலில் காலை 7 மணிக்கு செம்பியன்பற்று மக்கள். (எ)

# மந்திகையில் பிரெஞ்சு சத்திரசிகிச்சை நிபுணர்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றுவதற்கென பிரெஞ்சு மருந்துவக் குழுவைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் சத்திரசிகிச்சை தேவையான நோயாளர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வரலாமென்று பிரெஞ்சு மருத்துவக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரைக் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ-4)

# வலையில் சிக்கிய சாக்கினுள் அழுகிய நிலையில் சடலம்

நீர்கொழும்பு கொச்சிக்கடை மணிச்சேனை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது வலையில் சிக்கிய பெரிய சாக்குப்பொதி ஒன்றை பரபரப்புடன் திறந்து பார்த்த பொழுது அதற்குள் அழுகிய நிலையில் சடலம் ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அது பற்றி உடனடியாக கொச்சிக்கடை பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் சடலத்தின் பகுதிகளை பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைத்தனர். (எ)

## உள்ளூர் சேவை நிறுத்த எதிரொலி:

# இலங்கையை கைவிட்டு விலகும் விமான கம்பனிகள்

உள்ளூர் விமான சேவைகளுக்கு ஸ்ரீலங்கா அரசு தடை விதித்திருப்பதை அடுத்து — உள்ளூர் விமான சேவைகளை நடத்திவந்த தனியார் விமானக் கம்பனிகள் பல இலங்கையில் தமது தொழிலைக் கைவிட்டு இந்தியாவுக்கோ அல்லது மாலைதீவுக்கோ செல்லத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)


## "முயற்சி"

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் வளர்ச்சி மையம்

இன்று **23-09-1995**

சனிக்கிழமை காலை 9-30மணிக்கு எமது நிறுவனத்தில்

- தையல் இயந்திரத் திருத்தற் பயிற்சி
- தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து
- ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து
- உடையமைத்தல்

ஆகிய பயிற்சி நெறிகளிற் சித்தியெய்திய மாணவர்களுக்கு

## சான்றிதழ் வழங்கு வைபவம்

வழங்குநர்: திரு. க. கந்தசாமி [கல்விப்பணிப்பாளர்]

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.

—செயலாளர்.

எமது திறன் விருத்தி மையத்தில் இடம் பெறும் பயிற்சி நெறிகள்:

நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தல், தையல் இயந்திரம் திருத்தல். தட்டச்சு இயந்திரம் திருத்தல், உடையமைத்தல், தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து, ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பூங்கனியியல்.

விபரத்திரட்டு அலுவலகத்துடன் தொடர்பு கொள்க!

[கி/2319]



## அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர் - 1995 பொது அறிவுப் போட்டியில் பரிசுபெறுவோர் விவரம்

1. சோமசுந்தரம் கிருஷ்ணதாஸ், C/o S. பத்மநாதன், சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய். 2. க. பால்ராஜ், சேரனாஸ்கஞ்சியம், கிளிநொச்சி. 3. சிதம்பரப்பிள்ளை, கமலநாதன் மாசார், பளை 4. கார்த்திகா, கார்த்திகேசு, 381, நுவரேலியா வீதி, புசல்லாவ. 5. செல்வி பி. சாயிறேகா 1ஆம் பிரிவு, மண்டூர் (கி மா) 6. எம். ஜயந்தி, 143/27 பண்டாரநாயக்கா மாவத்தை, கொழும்பு - 12.

1996ஆம் ஆண்டுக்குரிய கலண்டரில் அறிவியல், பொது அறிவு பொன்மொழி சம்பந்தமான போட்டி வெளிவரும் விவரங்களுக்கு கலண்டரை எதிர்பாருங்கள்.

சிவா அச்சகம், கைதடி.

(சி-2335)



## BECON

யாழ்ப்பாணம்

**A/L - 97**

வணிகப் புள்ளி விபரவியல்

திரு. S. S. மனோகரன்

ஆரம்பம் 24 - 09 - 1995

பிரிவு I 8-00 மணி
பிரிவு II 7-00 மணி

(சி-2296)


# காகிதாதிகளை எடுத்து வர கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப். 23

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு தேவையான காகிதாதிகளை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பாடசாலைகளுக்குத் தேவையான காகிதாதிகள் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள தொகையிலும் பார்க்க அரைவாசித் தொகையையே எடுத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## செப்ரிசீமியா:

# ஒன்றரை வயது பாலகன் மரணம்

யாழ்ப்பாணம், செப். 23

காய்ச்சல் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த 6 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயதுப் பாலகன் கடந்த புதன்கிழமை அங்கு மரணமானான்.

அரியாலையைச் சேர்ந்த மகாலிங்கம் கமலராஜ் என்ற இந்தப்பாலகன் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு செப்ரிசீமியா தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானான் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-13)

# பாடசாலை அதிபர்களின்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதுமாணிப்பட்டம் —2 புள்ளிகள்.

சேவைக் காலம்

1994 - 10 - 06 வரை சேவைக்காலம் கணிப்பிடப்பட்டு வருடம் ஒன்றுக்கு— 1 புள்ளி.

போட்டிப் பரீட்சை

இலங்கை அதிபர் சேவையின் போட்டிப் பரீட்சையில் அல்லது பழைய அதிபர் தரம் 4. அதிபர் தரம் 5 ஆகியவற்றில் சித்தியடைந்தமைக்காக தரம் 1 — 5 புள்ளிகள்.

தரம் 2 அல்லது தரம் 4 — 5 புள்ளிகள்

தரம் 3 அல்லது தரம் 5 — 3 புள்ளிகள்

அவரவர் பெற்றுள்ள உயர்வான தரத்திற்காகவே புள்ளிகள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற் கூறப்பட்டுள்ளவாறு புள்ளிகள் சேர்க்கப்பட்டு புதிய அதிபர் சேவையின் பிரிவுகளுக்கு உள்வாங்கப் படுவார்கள்.

10 புள்ளிகளுக்கு குறைவாகப் பெறும் சில அதிபர்களும் சேவையில் இருப்பார்கள் எனக் கணிக்கப்பட்டு இவர்களுக்காக தற்காலிகமாக சேர்க்கப்பட்டுள்ள 3ஆம் வகுப்பு ஆலோசிக்கப்பட்டுள்ளது சிறிதுகாலத்தின் பின்னர் இந்த வகுப்பு இல்லாது போய்விடும்.

சம்பளம்

உத்தேசமாக 25 புள்ளிகள் அல்லது 30 புள்ளிகள் பெறும் அதிபர் ஒருவர் முதலாம் வகுப்பு சம்பளமாக 8,750 ரூபாவை பெறுமாறு இத்திட்டம் ஆலோசிக்கப்பட்டுள்ளது அதிகரிக்கும்புள்ளிகளின் அடிப்படையில் சம்பள படிநிலைகளும் அதிகரிக்கும்.

இதன் அடிப்படையில் முதலாம் தரத்தில் தற்போதுள்ள ஆளணித் தொகையான 4,134 ஆனது 10,000க்கும் மேலாக அதிகரிக்க இடமுண்டு. அதிபர் தரம், அதிபர் சேவைக்காலம், போட்டிப் பரீட்சை போன்றவற்றுக்கு புள்ளிகள் கொடுக்கப்படுவதால் இறுதி முடிவின் போது ஒன்றுக்கு புள்ளி இல்லாது போக இடமுண்டு.

இந்த ஆலோசனைகள் விரைவில் கல்வி உயர்கல்வி அமைச்சுக்கும் நிர்வாக அதிகாரிகளிடமும் அவர்களின் பரிசீலனைக்காகவும் வழங்கப்பட உள்ளது. பொதுநிர்வாக அமைச்சு மற்றும் திறைசேரி அதிகாரிகளினதும் ஆலோசனையும் பெறப்பட உள்ளது.

ஆசிரியர் சேவையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகளுக்கு ஆசிரியர் தொழிற் சங்கங்களே காரணமானவை என்று கூறப்பட்ட போதிலும் இவர்களால் தயாரிக்கப்பட்ட பிரமாணக் குறிப்பு உயர் அதிகாரிகளால் மாற்றம் செய்யப்பட்டமையும் சில விடயங்கள் சேர்க்கப்படாமையும் மறுக்க முடியாத உண்மையாகும்.

1985 முதல் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவை புதிய அதிபர் சேவையாக மீளமைக்கப்படும் போது இத்தகைய குறைபாடுகள் உண்டாகக் கூடாது என்பதற்காகவே சகல ஆசிரியர் தொழிற் சங்கங்களும் மிகக் கவனமாக இதைத் தயாரித்துள்ளன.

06-10-1995 அன்று இடம் பெறவுள்ள உலக ஆசிரியர் தின விழாவின் போது புதிய அதிபர் சேவை சம்பந்தமான பிரகடனம் வெளிவருவது பொருத்தமாக இருக்கும் என ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பணியில்,

# மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து

# 4 ஆவது ஆண்டில்

# சேரன் பல்பொருள் வாணிபம்

யாழ்ப்பாணம்

23 - 09 - 1995

* அத்தியாவசியப் பொருள்கள்
* எழுது கருவிகள்
* அலங்காரப் பொருள்கள்
* ஆங்கில மருந்து வகைகள்
* வேளாண் இடுபொருள்கள்
* ஆடை அணிகலன்கள்
* பல்பொறி உதிரிகள்

அனைத்தையும் தரமானதாக நியாய விலையில் உங்களுக்கு வழங்கும்

ஒரே நிறுவனம்:

# "சேரன்"

## எமது கிளைகள்

சேரன் பல்பொருள் வாணிபம்
நெல்லியடி

சேரன் பல்பொருள் வாணிபம்
மருத்திதுறை

சேரன் பல்பொருள் வாணிபம்
உடுப்பிட்டி

சேரன் பல்பொருள் வாணிபம்
சாவகச்சேரி

சேரன் பல்பொருள் வாணிபம்
கொடிகாமம்

சேரன் பல்பொருள் வாணிபம்
சுன்னாகம்

## சிறப்பு அங்காடிகள்

சேரன் எழுதுபொருள் வாணிபம்
யாழ்ப்பாணம்

சேரன் பல்பொறி உதிரிகள் வாணிபம்
யாழ்ப்பாணம்

சேரன் வேளாண் இடுபொருள் வாணிபம்
சுன்னாகம்

சேரன் மருந்து வாணிபம்
யாழ்ப்பாணம்

எழிற்கூடம் யாழ்ப்பாணம்

எழினி யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்
யாழ்ப்பாணம்

வாடிக்கையாளருக்கு

இந் நாளில் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும்
உங்களுக்காக எமது பணியைத் தொடர
உங்களின் ஆதரவை வேண்டுகின்றோம்

# மக்களின் மகிழ்ச்சி
# சேரனின் வளர்ச்சி

(சி-2330)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கூரை சீற் 8 அடி, 10 அடி, உள் சீற் (கழட்டியது) தட்டை ஓடுகள், யன்னல் கிறில், யன்னல் கதவுகள், வீட்டுக் கதவுகள், இரும்புக் கேற் முதலியன விற்பனைக்குண்டு. தி. கிருஷ்ணராஜா, இல. 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (38592)

சகல விதமான வகை, வெற்று, பொது அற்றோணி தத்துவம், விசேட அற்றோணித் தத்துவம் ஆகிய உறுதிப்பாரங்களும் பெற்றுக் கொள்ளலாம். ஏ. சி எஸ். ஸ்தாபனம் (சுன்னாகம்), C. S. S. முத்துக்குமாரு, C/o மு. இராதாகிருஷ்ணன், ஆசிரிய கலாசாலைக்கு பின்புறம் கோப்பாய் தெற்கு. (38609)

அழகிய சிங்கி, பிறாமா, கோழிகள் விற்பனைக்கு உண்டு [நிறம்] தொடர்பு: T. தர்சன், 33, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி (ரவி பார் அருகில் சமலக்கண்ணன்வீதி). (38637)

3'x5' கிறில்கேற், 2'x5' கராக்கேற், பூச்சாடிகள், முயல்குட்டிகள், சணல் ஆடு (பால் கறக்கும் நிலையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு இல. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [38642]

## மணமகள் தேவை

நற்குணமுடைய 32 வயதுள்ள பெரிய உத்தியோகத்திலுள்ள B. Sc மணமகனுக்கு படித்த நிறமான அழ... நல்ல குடும்பத்தைச் ... மணமகள் தேவை. ...டர்பு: விள. இல. 849, உதயன். (38641)

## ... 95 பரீட்சைக்காக

...கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், விவசாயம், மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond. 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (8721)

## வீடு வளவு விற்பனைக்கு

சரசாலை வடக்கு, பருத்தித்துறை வீதியில் 6¼ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. மலர்விழி, மே/பா ம. சங்காதரம், சரசாலை சாவகச்சேரி. [48589]

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து ஆங்கிலம் ஆண்டு நான்கிலிருந்து O/Lஇற்கு அப்பாலும் ஆரம்ப அறிவிலிருந்து பரந்த அறிவைப் பெறுவதற்கும் கற்பிக்கப்படும். உங்கள் விலாசங்கள் மாத்திரம் அறிவித்தால் உடன் நேரில் தொடர்பு கொள்ளப்படும். தொடர்பு: இல. 977. மே/பா உதயன். [8747]

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு. மருந்தகத்திற்கு உகந்தது. தொடர்பு கொள்ளவும்: இல. 9, செட்டித் தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (38627)

## மணமகன் தேவை

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய குற்றமற்ற அழகிய பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி கணக்காளர், டாக்டர், என்ஜினியர், சட்டத்தரணி விருப்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்: திருமதி பு. அம்பலவாணர், "சற்குரு வாசம்" திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (38623)

## புலமைப் பரிசில்

1995 முதல் நடைமுறைக்கு வரும் புதிய பரீட்சைத் திட்டத்திற்கு அமைவான வழிகாட்டியும் வினா-விடைக் கொத்தும். வி என் எல். உதயசந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-2310)

## சீயாக்காய்ப் பவுடர்

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்ற நிலையை உணர்ந்து அதனைப் பேணிக் காக்கும் முகமாக சித்த மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காயுடன் மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பவுடரை வாங்கி பாவித்து பலனைப் பெறுவீர்களாக. (சி-1727)

---

**கீன்**
**கல்வி நிலையம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**A/L - 96**
**DAY CLASS**
(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)

கலை, வர்த்தகம்
வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்:
**29 - 09 - 1995**
வெள்ளி காலை 8மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-2304)

---

**A\L - 96**
**DAY CLASS**
(பகல் நேர வகுப்புக்கள்)
(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)

ஆரம்பம்:
**25 - 09 - 1995**
(திங்கள் காலை 9மணி)

முன்கூட்டியே அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

**புதிய**
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்

(சி-2333)

---

# பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

## A/L 97 வர்த்தகப் பிரிவு

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| கணக்கியல் | திரு. சௌந்தி | 8-00 — 9-00 |
| வர்த்தகம் | திரு. வரதன் | 9-00 — 10-00 |
| பொருளியல் | திரு. வரதராஜன் | 10 00 — 11-00 |
| வணிகப்புள்ளிவிபரவியல் | திரு. தவசேகர் | 11-00 — 12-00 |

## A/L 97 கலைப் பிரிவு

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| தமிழ் | திருமதி மீரா | 7 00 — 8-00 |
| இந்துநாகரிகம் | திரு. காரை. கெங்கா | 8-00 — 9-00 |
| அளவையியல் | திரு. சர்மா | 9-00 — 10-00 |
| பொருளியல் | திரு வரதராஜன் | 10-00 — 11-00 |
| புவியியல் | திரு சண் | 11-00 — 12-00 |
| கிறிஸ்தவம் | திரு நிரஞ்சன் | 8-00 — 9-00 |

**ஆரம்பம்: 24 - 09 - 1995 (ஞாயிறு)**

(சி-2301)

---

சேவை நலம்
# பாராட்டு விழா

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளை
முன்னை நாள் முகாமையாளர்

**திரு. நாகலிங்கம் விவேகானந்தன்**

அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா ஒன்றை மானிப்பாய் சோதி வேப்படி பாடசாலையில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். வாடிக்கையாளர்கள் அனைவரையும் **24 - 09 - 1995** ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணிக்கு சமுகந்தந்து இவ்விழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு;
வாடிக்கையாளர் சார்பாக
திரு. வி. செகராஜசிங்கம்
(இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர்)

(38638)

---

ஆத்மஜோதி நா. முத்தையா
அவர்கள்

# கண்ணீர்ப்பூக்கள்

ஆத்மஜோதி அப்பா
இந்த மண்ணின்
இன்னல்களை சொல்லிட
இறை பணியாற்றிட
அக்கரைக்குச் சென்றீர்கள்
வருகையை பார்த்திருக்கையில்,
வந்ததோ...... பிரிந்த செய்தி,
கலங்கி நிற்கிறோம்,
கண்ணீர்ப் பூக்களால்,
அர்ச்சித்து
கை கூப்பி நிற்கிறோம்.
நீங்கள்
இறையடியில் இன்புற்றிருக்க

உரிமையாளர்,
பொ. கெங்காதரம்பிள்ளை,
கங்கா புகைப்பட நிலையம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கிளை:- மீசாலை.

(38640)

---

31 ஆம் நாள்
# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**முருகேசு சற்குணலிங்கம்**
[ஆசிரியர் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி]

மலர்வு: **28 — 08 — 1938**
உதிர்வு: **24 — 08 — 1995**

எம்மை அன்புடனும், பாசத்துடனும் பேணிப் பாதுகாத்து 24 - 08 - 1995 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்தும் துயரச் செய்தி கேட்டு துக்கத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரிக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 23 - 09 - 1995 (சனிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கலம்பரை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(38629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இரும்புத்திரை விரிகிறது!

போர்ச் சம்பவங்கள், போர் நடவடிக்கைகள், போர் இரகசியங்கள், நாட்டின் பாதுகாப்பு குறித்த விவகாரங்கள் சம்பந்தமான செய்தித் தணிக்கையை ஸ்ரீலங்கா அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

மேற்படி செய்திகளை, அரசாங்கம் நியமித்துள்ள தகுதி வாய்ந்த அதிகாரி, வெட்டிக் கொத்தி, மாற்றம் செய்து, அழித்து மறைத்து எழுதிய பின்னரே வெளியிட முடியும். பல சந்தர்ப்பங்களில் உண்மைகளை வெளியிடுவதற்குத் தடையும் விதிக்கப்படும்!

இந்தச் செய்தித் தணிக்கை உள்நாட்டு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகளுக்கு மட்டுமன்றி வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

வடக்கு - கிழக்கில் நடக்கும் போர்நிலைமையை, அரசு சந்திக்கும் தோல்விகளை, அதற்கு உண்டாகும் இழப்புகளை, பின்னடைவுகளை சிங்கள மக்களுக்கும், வெளி உலகத்துக்கும் தெரியாமல் மறைப்பதே செய்தித் தணிக்கையின் பிரதான நோக்கம்.

குறிப்பாக, வடக்கில் பாரிய படை எடுப்புக்குத் திட்டமிட்டிருக்கும், வேளையில், செய்தித் தணிக்கை கொண்டு வரப்பட்டிருப்பது, அரசாங்கப் படைகள் இங்கே நடத்தவுள்ள இனப்படு கொலையை மறைப்பதற்காகவே.

தமிழ்ப் பொதுமக்களை விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல் மூலம் கொன்றுவிட்டுவிடுதலைப் புலிகளைப்பெரும் எண்ணிக்கையில் அழித்து அவர்களைப் பல வீனப்படுத்தி விட்டதாகக் காட்டுவதற்கும் செய்தித் தணிக்கை அரசுக்குப் பெரிதும் பயன்படும்.

போரின் பொய்மைத் தோற்றத்தைக் காட்டி, உண்மை நிலையை மறைத்து விடுவதற்கான முன்னேற்பாடு இது. செய்தித் தணிக்கை என்ற இரும்புத் திரையைப் போட்டு விட்டு, அதன் பின்னால் நின்று தமிழர் இனப்படுகொலையை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான சூக்குமம் இது.

சில பத்திரிகைகள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டால் அவற்றைத் திருத்துவதற்குவேறு வழிகள் உண்டு. உண்மையான ஜனநாயகத்தில் செய்தித் தணிக்கைதான் அதற்கு மருந்து என்பதல்லை.

சந்திரிகா அரசாங்கம் பதவியேற்ற சில மாதங்களிலேயே உண்மைகளுக்கு அஞ்சத் தொடங்கி விட்டது. கொயபல்ஸ் பொய்களிலேயே ஆட்சி நடத்த விரும்பியது. அந்த விருப்பம் தணிக்கை வடிவத்தில் இப்போது நிறைவேறுகிறது!

போர்ச் செய்திகளுக்கு வந்துள்ள தணிக்கை ஏனைய விடயங்களுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படும்.

போர் நிலைமை சம்பந்தமான தகவல்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவையூடாக உண்மை நிலையை வெளிப்படுத்துவது விடுதலைப் புலிகளுக்கு ஒன்றும் கடினமான காரியமில்லை.

அரசின் குறைபாடுகளை, இயலாத்தனத்தை மறைத்து, அதிகாரத்தனத்தை மேலோங்கச் செய்து சர்வாதிகாரத்தைக் கொண்டு வருவதற்கு இடப்படும் அத்திவாரமே இச்செய்தித் தணிக்கை. இரும்புத் திரை மேலும் விரிந்துச் செல்லப்படும். சிங்களவர்கள் இதனை விரைவில் உணர்வர்!

# இறுதிக் கிரியைகளைக் கூட நடத்த முடியாதவாறு ஷெல் தாக்குதல்

## வடமராட்சி வெறிச்சோடிக் கிடக்கிறது

யாழ்ப்பாணம், செப். 23

வடமராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல், விமானத் தாக்குதல் சம்பவங்களின் போது உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளைக் கூட ஒழுங்காக நடத்தமுடியாத நிலை இருந்தது

நெல்லண்டை கிழக்கு உடையார் ஒழுங்கை, கற்கோவளம் பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சு தாக்குதலினால் இறந்த மூவரினது இறுதிக் கிரியைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை தொடர்ச்சியாக அப்பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களும் இறந்தவர்களின் உரிமையாளர்களும் பாதுகாப்புத் தேடி சிதறி ஓடினர்.

இடைவேளை பார்த்து அவசர அவசரமாக இவர்கள் இறுதிக் கிரியைகளை நடத்தி முடித்தனர்.

புக்காரா குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல் சம்பவங்களை அடுத்து வடமராட்சிப் பகுதி நேற்று வழமைநிலை பாதிக்கப்பட்டுவெறிச்சோடிக் காணப்பட்டது.

அதிகாலை முதல் பிற்பகல் வரை மாறிமாறி இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தால் வடமராட்சிப் பகுதி மக்கள் அனைவரும் பதுங்கு குழிகளிலும் ஆலயங்களிலுமே நேற்றைய பொழுதைக் கழித்தனர், மக்கள் வெளியில் நடமாட பீதியடைந்து காணப்பட்டனர்.

பருத்தித்துறை சந்தை மற்றும் கடைகள், பாடசாலைகள் யாவும் 10 மணியுடன் மூடப்பட்டன.

குண்டு வீச்சு நடைபெற்ற பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர்,

புக்காரா குண்டுவீச்சுநடந்த பகுதிகளில் சுடுகாடு போன்று எரிந்து கறுத்த மண்ணும், கருகிய மரந்தடிகளும் காணப்பட்டன. [இ-15]

## மணற்காடு, கற்கோவளம் பகுதி குண்டுவீச்சில் காயமடைந்த 34 பேர்

வடமராட்சி, செப். 23

நேற்றுக் காலை 6 மணி அளவில் மணற்காட்டிலும் நெல்லண்டையிலும் பின்னர் நண்பகல் 12 மணி அளவில் வராத்துப்பளைப் பகுதியிலும் இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சுக்களின்போது 34 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் விவரம்:

மணற்காடு

★ இரத்தினம் டோமினிக்கா (வயது 10) சிறுமி

★ இவரது சகோதரரான இரத்தினம் கலிமன் [வயது 12) வலது கால் துண்டிக்கப்பட்டார். இவர்களது சகோதரர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

★ யோன் பொஸ்கோ கார்மனா (வயது 7) இவரது சகோதரி இச்சம்பவத்தில் மரணமானார்.

★ சூசைப்பிள்ளை மாக்கல் வெஸ்லி (வயது 12)

★ மனோகரதாஸ் மேரி அனுஷியா (வயது 7)

★ இரப்பியேல் திரேசம்மா (வயது 70)

★ இவரது மகளான இரப்பியேல் மேரி லூயிஸ்பைம்மா (வயது 23)

★ சூசைப்பிள்ளை பிலோமினா (வயது 50)

★ அன்ரன் அகிலதாஸ் (வயது 4)

★ பேதுறுப்பிள்ளை மரிய முத்து (வயது 70)

★ நீக்கிலாஸ் மேரிமற்றலின் (வயது 47)

★ இவரது மகன் நீக்கிலாஸ் அன்ரனட்றியா (வயது 5)

★ விஜயரட்ணம் (வயது 34)

★ இளிராசா அனுஷியா (வயது 8)

நெல்லண்டை

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி செல்லையா (வயது 60)

அவர்களது பிள்ளைகளான செல்லையா சத்தியபாமா (வயது 26)

செல்லையா சிவநேசன் (வயது 10)

★ சத்தியபாமாவின் குழந்தையான சிவசக்தி (வயது $2\frac{1}{2}$)

நெல்லண்டை பத்திரகாளி கோவிலடிக்கு பாதுகாப்புத் தேடி ஓடிச்சென்றவர்களான

★ நாகலிங்கம் விஜயரட்ணம் (வயது 52)

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ரூ, 45 ஆயிரம் கடனுதவி

தென்மராட்சி, செப். 23

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினர் இப் பகுதியில் உள்ள பதினொரு பயனாளிகளுக்கு ரூபா 45 ஆயிரத்தை சுயசார்புக் கடனாக வழங்கியுள்ளனர். (ஓ-117)

## நாகர்கோவிலில் காயமுற்றோர் விவரம்

நாகர் கோவில் பாடசாலைப்பகுதி மீது 'புக்காரா' நடத்திய தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அவர்களில் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 23 பேரினதும், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 22 பேரினது விவரங்கள் வருமாறு.

பருத்தித்துறையில்

★ அருணாசலம் முருகுப்பிள்ளை [வயது 67]

★ கிருஷ்ணகோபால் மகேஸ்வரி (வயது 10)

★ கதிரிப்பிள்ளை ஆனந்தசிவம் [வயது 45]

★ அமிர்தலிங்கம் கமலாதேவி [வயது [32]

★ என். மதுராணி (வயது 13]

★ தனபாலசிங்கம் கவிதா [வயது 15]

★ ஏ. தவலட்சுமி (வயது 13]

★ என். அன்பரசி (வயது 13)

★ அல்பேர்ட் கலியுகச் செல்வி [வயது 15]

★ இராசையா லோஜினி [வயது 12]

★ ச. முருகன் [வயது 11]

★ வ. மகாலட்சுமி [வயது 45]

★ ஏ. கவிதா [வயது 17]

★ வ. கௌதஸ்ரீ [வயது13]

★ பாலசுப்பிரமணியம் சாண்டியாயினி (வயது 14)

★ நாகமுத்து பார்வதி [வயது 45]

★ ஏ. சுந்தரலிங்கம் (வயது 45)

★ க. இராசதுரை (வயது 24)

★ செ. செல்வக்குமார் [வயது 12]

★ செபமாலை [வயது 13]

★ க. அனந்தசிவம் [வயது 45]

★ நா. இராசலிங்கம் (வயது 44)

★ அ. ரேணுகாயினி (வயது 12]

இவர்கள் அனைவரும் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில்

★ ரி. கணபதிப்பிள்ளை (வயது 40]

★ எஸ். தங்கநாதன் [வயது 17]

★ ஜி. காயத்திரி [வயது 14)

★ கே. உதயகுமார் (வயது 81]

★ ரி. கலைவாணி (வயது 14]

★ சசிரூபி (வயது 13)

★ எஸ். செல்வகுமார் [வயது 12]

★ எஸ். நேசரஞ்சனி [வயது 23]

★ நாகலட்சுமி (வயது 45)

★ எஸ். ராதிகா [வயது 12]

★ தம்பிராசா [வயது 38]

★ சஞ்சையன் (வயது 11)

★ கோகிலாதேவி (வயது 47]

★ ஜே. தவமணிதேவி (வயது 39)

★ ஜோண்ஸன் ஜெயசித்திரா (ஒருவயது)

★ எஸ். சந்திரன் (வயது 11]

★ எஸ். வர்ணகுலசிங்கம் [வயது 35]

★ கே. லோகராசா [வயது 40]

★ எஸ். சாரதா [வயது 45]

★ ஏ. ஜெயராணி (வயது 53]

★ நொயிலின் மகேந்திரா [வயது ...]

★ [illegible] [வயது 9]

## பிள்ளையார் விக்கிரகங்கள் பால் அருந்தும் அதிசயம்!

### நேரில் காண திரளும் பக்தர்கள்

புதுடில்லி, செப், 23

பிள்ளையார் விக்கிரகங்கள் பால் அருந்துவதாக வெளியான தகவல்களை அடுத்து உலக நாடுகள்பலவற்றில் உள்ள இந்து ஆலயங்களில் ஆயிரக்கணக்கான இந்துகள் அந்த அதிசயத்தைக் காண திரண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

பிள்ளையார் விக்கிரகம் பால் அருந்தும் அதிசயம் முதலில் புதுடில்லியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் நிகழ்ந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிள்ளையார் விக்கிரகத்தின் வாயடியில் பால்க்கரண்டியைப் பிடித்த வேளை பிள்ளையார் அதனை அருந்தும் காட்சியை 'தூரதர்ஷன்' தொலைக்காட்சி ஒளிபரப்பியதைக் காணமுடிந்தது.

உலக நாடுகள் பலவற்றில் உள்ள இந்து ஆலயங்களிலும் இது போன்று அதிசயம் நிகழ்ந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தோனேசியா, அமெரிக்கா, பங்களாதேஷ், இங்கிலாந்து, ஹொங்கொங், தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள இந்து ஆலயங்களில் இந்த அதிசயத்தை நேரில் காண பெரும் எண்ணிக்கையான இந்துக்கள் கூடி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் உள்ள செண்பக விநாயகர் கோவிலிலும், ஸ்ரீ மாரி அம்மன் கோவிலிலும், உள்ள விநாயகர் விக்கிரகங்கள் பக்தர்கள் வழங்கும் பாலை அருந்திய சம்பவங்களை நேரில் கண்ட பலர் தெரிவித்தனர் என்று சிங்கப்பூர் வானொலி அறிவித்தது.

இலங்கையில் உள்ள சில இந்து ஆலயங்களிலும் இந்த அதிசயம் நிகழ்ந்திருப்பதாக இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

விக்கிரகங்கள் பால் அருந்துவதான சம்பவங்கள் முழுவதும் வெறும் கண்கட்டி வித்தை என்று இந்தியாவில் உள்ள விஞ்ஞானிகள் சிலர் தெரிவித்துள்ளனர். (ஐ-8)

## ஷெல் வீச்சினால் காயமுற்றோர்

யாழ்ப்பாணம், செப். 23

வடமராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் வீச்சு சம்பவங்களின் போது பலர் காயம் அடைந்தனர். அவர்களில் சிலரின் பெயர்கள் வருமாறு.

★ அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற ஷெல் வீச்சின் போது பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையைச் சேர்ந்த அருச்சுனலிங்கம் வந்திகைதேவன் (வயது 25)

★ சந்தாதோட்டம் பகுதியில் விழுந்த ஷெல்லினால் முருகேசு நடராசா [வயது 55]

★ தும்பளையில் செல்வராசா புஸ்பராணி [வயது 37]

★ அல்வாய் மேற்கு மாறாம் புலத்தில் தம்பர் மகேசன் (வயது 80)

[இ-15-13-173]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாள அட்டை யாருடையது?

யாழ்ப்பாணம், செப். 23

சிறுவிளான் இளவாலையைச் சேர்ந்த செல்வி. விஜி பரமலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை கச்சேரிக்கு சமீபமாக கண்டெடுக்கப்பட்டு, தமிழீழ நிர்வாக சேவைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நிர்வாக சேவைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு தகுந்தவாறு உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமான தாக்குதல் மாலை வரை நீடித்தது

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் நேற்றையதினம் உக்கிரமான விமான, ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று அதிகாலை 3 மணியளவில் பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் பொலிகண்டி கொற்றாவத்தை, புலோலி கிழக்கிலுள்ள விஸ்வகுல ஒழுங்கை, உத்திராவத்தை சந்தா தோட்டம் ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

இதனையடுத்து காலை 6 மணிக்கு வடமராட்சி கிழக்கு, வடமராட்சிப் பிரதேசங்களுக்கு வந்த இரு புக்காரா விமானங்கள் வடமராட்சி கிழக்கு வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசங்களை அரைமணி நேரமாக மிக உயரத்தில் கண்களுக்கு புலப்படாதவாறு முகில் கூட்டங்களுக்குள் சுற்றிச் சுழன்று திரிந்து வடமராட்சி வடக்கில் கற்கோவளத்திலும், வடமராட்சி கிழக்கில் மணற்காட்டிலும் பத்துக்கு மேற்பட்ட றொக்கட் லோஞ்சர் தாக்குதல்களை நடத்தின.

தாக்குதல்களை நடத்திய இவ் விமானங்கள் மீண்டும் வந்த வழியே ஓடிமறைந்தன.

இத் தாக்குதலைத்தொடர்ந்து காலை 6.30 மணியளவில் பலாலி முகாமிலிருந்து மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பல ஷெல்கள் அல்வாய் — மாறாம்புலம் வேவிலந்தை முத்துமாரி கோவிலுக்கு அண்மையில் உள்ள பகுதிகள் ஆகியவற்றில் வீழ்ந்து வெடித்தன.

மீண்டும் முற்பகல் 11 மணியளவில் பலாலி முகாமிலிருந்து ஷெல்கள் ஏவப்பட்டன இவை புலோலி தென்மேற்கு கடலில், மாதனை ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

இச்சம்பவத்தையடுத்து 12-50 மணியளவில் திரும்பவும் வடமராட்சி கிழக்கு வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களில் ஊடுருவிய இருபுக்காராவிமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் மகாவித்தியாலயம், அதனைச் சூழவுள்ள பகுதிகள், வடமராட்சி வடக்கிலுள்ள வரத்துப்பளை கற்கோவளம் ஆகிய பகுதிகளில் குண்டுத் தாக்குதல்களையும் றொக்கட் லோஞ்சர் தாக்குதல்களையும் நடத்தின.

நாகர்கோவிலில் நடத்தப்பட்ட இக் குரூரமான ஈனத்தனமான தாக்குதலை அடுத்து, மீண்டும் மாலை 5-45 மணியளவில் இதே பகுதிகளுக்கு வந்த அதே விமானங்கள் அதே பகுதிகளிலும் முனையிலும் தாக்குதல்களை நடத்தின.

இந்த விமானங்கள் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றதையடுத்து மாலை 6-30 மணியளவில் பலாலி முகாமிலிருந்து மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பல ஷெல்கள் பருத்தித்துறை சிவன் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

### சுட்டுக் கொலை

ஏறாவூருக்கு அருகிலுள்ள மாதுறையில் வைத்து ரெலோ இயக்கத்தின் முக்கிய நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை காலையில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொலைப் பட்டார்.

## மாஹோவில் தபால்கள் மற்றும் மண்எண்ணெய்

நான்கு மாதங்களுக்கு மேலாக மருதானை மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக் கிடந்த ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட வடபகுதி தபால் பொதிகளில் 250 தபால் பொதிகள் "மாஹோ" கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

மேலும் 600 தபால்பொதிகள் படையினரின் சோதனை முடிவடைந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் கப்பலில் வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கப்பல் வசதியின்மையால் சோதனை முடிந்த நிலையில் இந்த 600 தபால் பொதிகளும் கொழும்பில் காத்திருப்பதாக பதில் வடமாகாண பிரதி அஞ்சலதிபர் நாயகம் திரு. சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இதற்கிடையில் காலநிலை பாதிப்பால் வடக்கே புறப்பட தாமதமான "மாஹோ" கப்பல் நேற்றுக் காலை வடக்கு நோக்கிப் புறப்பட்டதாக யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இக்கப்பலில் 6 ஆயிரத்து 900 பரல் மண்எண்ணெய் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் ஆகியவையும் எடுத்து வரப்படுகின்றன. [இ-3-4]

## நாளை பாதுகாப்பு நிதி செலுத்தக் கூடிய இடங்கள்

யாழ்ப்பாணம், செப். 23

தேசிய பாதுகாப்பு நிதிக்குப் பங்களிப்புச் செய்ய ஒப்புக் கொண்ட சங்கானை வட்ட சண்டிலிப்பாய் வட்ட மக்கள் தமது நிதியினை நாளை ஞாயிற்றுக்கிழமை செலுத்துவதற்கு நிதித் துறையினர் ஒழுங்கு செய்துள்ள இடங்களும், நேரமும்:

**சங்கானை**

★ வட்டு. வடக்கு/தெற்கு —சுப்பிரமணிய வித்தியாலயம், வட்டுக்கோட்டை— மு. ப. 8-30 — நண்பகல் 12-00.

★ சித்தன்கேணி/வட்டு. வடக்கு, அராலி வடக்கு— வட்டு. இந்துக்கல்லூரி சித்தன்கேணி— பி. ப. 2-30 — மாலை 5-00.

**சண்டிலிப்பாய்**

★ சாவற்கட்டு/உயரப்புலம் —பாலசுப்பிரமணிய வித்தியாலயம் மு. ப. 8-30 — நண்பகல் 12-00.

★ நவாலி வடக்கு, தெற்கு கிழக்கு— ஆனைக்கோட்டை — பி. ப. 2-30 — மாலை 5-00. (எ)

நீர்வேலியில்

## பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 23

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று கோப்பாய் வட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

நாளை காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில்— பத்தமேனி (ஜே/281), கதிரிப்பாய் (ஜே/282) இடைக்காடு(ஜே/283), வளலாய் [ஜே /284], அச்சுவேலி வடக்கு(ஜே/285), அச்சுவேலி தெற்கு (ஜே/286) அச்சுவேலி மேற்கு (ஜே/287) கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த குடும்பங்களில் ஒவ்வொருவரைச் கலந்து கொள்ளுமாறு கோப்பாய் வட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (அ)

### ஒரே குடும்பத்தைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலைப்பட்டார்.

இவரின் சகோதரர்களான ஈஸ்வரபாதம் விஜிதா (வயது 13] ஈஸ்வரபாதம் விஜிகரன் (வயது 7] ஈஸ்வரபாதம் சஜிதா (வயது 03) ஆகிய மூவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில்சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வேளை உயிரிழந்தனர்.

கலட்டியில் இடம்பெற்ற மற்றொரு ஷெல் தாக்குதலில் சின்னத்துரை துஷ்யந்தினி [வயது 12] என்ற சிறுமி அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று மாலை 6 மணிக்கு பருத்தித்துறையில் விழுந்த ஷெல்லினால் சுப்பிரமணியம் சத்திமாமேரி (வயது 40) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

(இ-118-173-13-15)

### பலியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ நாகமுத்து செந்தில்வேல் [வயது 15)

★ அல்போன்ஸ் அமலகிஜி (வயது 14)

★ மகாலிங்கம் சண்முகவடிவேல் [வயது 16)

★ ர. சமித்தா [வயது 10)

★ க. மேதினி [வயது 14]

★ நவமணி மிதுரா [வயது 14)

★ செல்வம் [வயது 16]

★ ராகவன் (வயது 16]

[உ-ரி-3-15-173]

## மனத்தைக் கனக்க வைத்த மந்திகை ஆஸ்பத்திரிக் காட்சிகள்!

### எங்கும் சோகம்; ஈனக்குரல்கள்!!

வடமராட்சி, செப். 23

மந்திகையில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நேற்று நண்பகல் ஒரு மணியின் பின்னர் பல நூறு மரணவீடுகள் சேர்ந்து நடந்த இடமாகக் காட்சியளித்தது.

எங்கும் சடலங்கள்; காயமடைந்தவர்கள்; எங்கும் அழுகை ஒலிகள்; ஈனக்குரல்கள் ஒப்பாரிகள் என்று ஒரே சோக மயமாக இருந்தது.

அங்கு சென்ற எவரின் நெஞ்சையும் உருக்குவதாக ஆஸ்பத்திரிக் காட்சிகள் அமைந்திருந்தன.

பாடசாலைக்குச் சென்ற பச்சிளம் பிள்ளைகள் பிணங்களாகவும், கால், கைகளை இழந்தவர்களாகவும் கண்ட போது தலை சுற்றியது; மயக்கம் வருவது போல இருந்தது.

மாணவர்கள், மாணவிகளின் வெள்ளைச் சீருடைகள் இரத்தம் தோய்ந்து சிவப்பேறிக் கிடந்ததைக் கண்ட எல்லோருமே மனம் உருகி அழுதனர்.

நாகர்கோவில் மந்திகையிலிருந்து சுமார் 9 மைல்கள். எனினும் போக்குவரத்து வசதிகள் குறைந்த பிரதேசம்.

இறந்தவர்கள் சிதறிய சடலங்கள் குவியலாகப் போடப்பட்டு லொறியில் ஏற்றிவரப்பட்டன. காயமடைந்தவர்களும் அவ்வாறே லொறியில் கொண்டுவரப்பட்டனர்.

காயமடைந்தவர்களால் ஆஸ்பத்திரி நிரம்பி வழிந்தது. சடலங்களை பிரேத அறையில் வைக்க முடியாத நிலையில் சத்திரசிகிச்சை, எக்ஸ்றே பிரிவுகளின் விறாந்தைகளிலும் வைக்கப்பட்டன. சடலங்களை வைக்க இடமில்லாததால் அவற்றை ஏற்றி வந்த லொறிகளில் வைத்தே பெயர் பதியப்பட்டு அனுப்பப்பட்டன பல சடலங்கள் இறக்கி எடுத்தால் பிரிந்து பிய்ந்து போகும் நிலையில் காணப்பட்டன.

சடலங்களையும் காயமுற்றவர்களையும் ஏற்றி வந்த லொறிகள் மட்டுமன்றி ஆஸ்பத்திரி வார்ட்டுகளும் விறாந்தைகளும் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டன.

காயமுற்றவர்களை ஆஸ்பத்திரி ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இறக்கி வார்ட்டுகளுக்குச் சென்றும் பாதை ஓரங்களில் படுக்க வைத்தனர்.

இறந்தவர்களின் சடலங்களை உறவினர்கள் தூக்கி வைத்து பெருங்குரல் வைத்து அழுதகாட்சி மனதை கனக்க வைத்தது.

இறந்தவர்களையும், காயமுற்றவர்களையும் பார்க்க வந்த பொதுமக்கள் பலரும் கண்ணீர்சிந்திய வண்ணம் காணப்பட்டனர்.

ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் ஊழியர்கள் குறைவாக இருந்த போதிலும் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் பணிபுரிந்தனர்.

இங்கு சிகிச்சை அளிக்க முடியாதவர்கள் உடனுக்குடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

[அ-173-15]

### மணற்காடு...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ மோசேஸ் யோசேப் (வயது 33)

**வராத்துப்பளை**

★ தங்கராசா வசந்தகுமார் [வயது 6)

★ சச்சிதானந்தம் பிரேம்ராஜ் [வயது 25)

★ சிறீதரன் ரஜனி (வயது 16)

★ அருமைலிங்கம் பானுகோபன் (வயது 16)

★ சி. சரஸ்வதி [வயது 40]

★ தங்கவேலாயுதம் ரேணுகாஸினி [வயது 12)

★ ரஞ்சித்குமார் ரஜிதா [வயது 11)

★ ராஜீவ் காந்தி வேணு [வயது 11]

★ ஆர். பத்மாஜினி [வயது 42]

★ ஆர். றெஜீனா [வயது 11]

★ பிரேமதாஸ் கலைமகள் (வயது 2[illegible])

★ செல்வராசா இராசேந்திரம் [வயது 50]

★ [illegible]ரையன் சின்னத்தம்பி [வயது [illegible]8)

★ [illegible] [வயது 32] [illegible])-13-118-173-15]

## மரண அறிவித்தல்

### சுவாம்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை (அண்ணாவியார்)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அண்ணாவியார் சுவாம்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை [தம்பித்துரை] 22-09-95 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் மேரிவில்லிப்பூவின் அன்புக் கணவரும், அருமைநாயகம் [ஜேர்மனி], தேவி சந்திரலேகா, பரமநாயகம் (குமார்- பாஹரீன்), சதாநாயகி [ராஜி] ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரான்சிஸ் காவசந்தி [ஜேர்மனி], ஜெனா மேபிள் [ஆசிரியை, வவுனியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், மெல்வின் அருண் (ஜேர்மனி], டினானி [ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேரனும், யோசேப் திரேசம்மா [பொன்னுக்கிளி, கனடா), காணிக்கைமேரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்து செல்லப்படும்.

தகவல்:
தேவி சந்திரலேகா
(மகள்)

(38652)

மேலும் மரண அறிவித்தல்கள்2 ஆம்பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-09-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org